56

விக்ருதி ஹூ
கார்த்திகை மீ

ஸம்புடம் 9
ஸஞ்சிகை 11

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்:

P. S. ஸ்ரீநிவாஸதேசிகாசார்யர், M.A., B.L., சிரோமணி,
(அட்வொகேட்)

ப்ரசுரிக்குமிடம்

நெ. 2, ஆதியப்பமுதலி தெரு; புரசைவாக்கம்
சென்னை—7.

வருஷச் சந்தா

NOVEMBER 1950
VOL. 9 NO 11

189275

விஷயஸூசிகை.

			பக்கம்
1.	மாலோலமுத்ராலயம் பற்றிய ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸநஅநுசாஸநங்கள்	...	334
2.	ஸங்கல்பஸூர்யோதயம்	...	335
3.	ஆஸ்திக்யம்	...	339
4.	கைமுதிகந்யாயவிசாரம்	...	341
5	நற்போதுபோக்கு	...	343
6	தேசிக ஸ்ரீஸூக்திகதசோத்யநூலவாநூலம்	...	346
7	புயனும்பொறுமையும்	...	348
8	செய்திகள்	...	353
9	பஞ்சாங்கஸங்க்ரஹம்	...	354
10	ஸம்பாதகரின் குறிப்புகள்	...	355

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள் மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்ரசுரப்படுத்தபடாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லாம் தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள் பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாசம் ப்ராப்தமாகும் பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பாவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

𑌶𑍍𑌰𑍀𑌃
𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃 ॥

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 9	விக்ருதி ௵ கார்த்திகை ௴	ஸஞ்சிகை 11

𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌃 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி
ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌚𑌰𑌣𑌾𑌰𑍍𑌪𑌿𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥

𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவைபோலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்³ரஹ்மணே நம: ।
ஶ்ரீமதே ஶ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ தி³வ்ய பாது³காஸேவக ஶ்ரீவண்ஶடகோப
ஶ்ரீ ஶ்ரீரங்க³ஶடகோப யதீந்த்³ர மஹாதே³ஶிகாய நம: ॥

" ஶ்ரீ மாலோல முத்³ராலயம் "

என்னும் ஶ்ரீ அஹோபிலமடத்து முத்³ராக்ஷரசாலையைப்பற்றி

ஶ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள் .

ஆசாஸநம்

மாலோல முத்³ராலய பா⁴ஸி ஜீயாத்³ராஜ … போ³தி⁴வம்ஶேஷு: ।
ஸம்ஸ்தா²பித: கிம் ந்ருஹரிநாயகேந்த்³ர வீர்யாம் சிரம் வர்த்³த⁴த தோஷதா³யீ ॥

ஸய்யாத்³ருஶ்ய நிகேதநே வத³ந்யாநாம் மஹாத்மநாம் ।
மேஷ ஜநதா த³த்த க்³ரந்தா² க்³ரந்தா²லய: ॥

அநுசாஸநம்

ஶ்ரீபா⁴ஷ்யாதி³ மஹார்க⁴ ப்ரக்³ரந்த²ம் கவிதாஸம்ஸ்தா² ।
… பா³தா⁴வி ஸேநவாஸ ஶ்ருத்யர்த²நாஸ்திக க்³ரந்தா²ணாம் ॥

ஶ்ரீ வீரராக⁴வத³யா ந்ருஸிம்ஹகருணாந்விதா ।
ஸத்³க்³ரந்தா²ஶ்ரய ஸௌஹ்ருத³ ஸர்வஸம்பத்ப்ரதா³ … ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(9-ம் அங்கம்)

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

(ஸ்ரீ·உப· A.V.கோபாலாசார்ய ஸ்வாமி,M.A.,B.L.,அட்வகேட்,திருச்சி·)

ராஜா—(ஆலோசித்து)இது இப்படி இருக்கட்டும். இப்பொழுது

ஜநநவிஷயவ்ருத்த்யா ஜாங்கிகஸ்யாஸ்ய ஜந்தோ:
ஸமயமவஸரஜ்ஞஸ் ஸாதயிஷ்யதி ஸ்ரீஸஹாய: |
ப்ரஸாரயமநகம் தாம் நிவ்ருத்திம் நிவ்ருத்தேர்
ப்ரஜநயது ஸமாதிம் ஸ்வாத்மந்யேவ ஸ்வலக்ஷ்யம் ||

இவனைப்போல முழங்கால் பலமும் அதன் வ்யாபாரமு முடையவன் கிடையாது. ‘ஜங்காலோதிஜவஸ்துல்யௌ ஜங்காகரிகஜாங்கிகௌ’ என்று அமரம். ‘முழங்கால் பலத்தால் ஜீவிப்பவன் என்று அமரஸூதை. அநேக ஜந்ம ஸாஹஸ்ரிகளாய் ஸம்ஸார மார்க்கத்தில் எத்தனையோ தூரமான லோகங்களுக்குச் சென்று சென்று திரும்புபவன். முழங்கால் நடையே இவனுக்கு ஓயாத தொழில். பல உலகங்களுக்குப் போய்ப் போய்த் திரும்புகிறவன். இவன் உடம்பையே நீக்கினால்தான் இவன் ஜாங்கிகத்வம் ஓயுமென்று தம் குழந்தையாகிய இவனை யோகியாக்கி அசரீரனை முக்தனுக்கவேண்டுமென்று ஸமயம் பார்த்துக்கொண்டேயிருக்கும் திவ்ய தம்பதிகள் இவனிடத்தில் கடாக்ஷத்தை வைத்து இவனுக்கு ‘மயர்வற மதிநல மருளினன்’ என்கிற மதிநல யோக ஸமாதியை அருளுகிறார்கள். இதற்கென்று அவர்கள் ஸமயம் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

ஸமயமவஸரஜ்ஞ— என்பதினால் இங்கே அவமர்ஶம், விமர்ஶம், என்னும் நாடக நாலாவது ஸந்தியை ஸ்பஷ்டமாக ஸூசிக்கிறார். அநுமாநத்தில் நான்காவது அவயவம் ‘பராமர்ஶம்’ என்பது. அடுத்த ஐந்தாவது அநுமிதி என்னும் அபாதிதமான பலம். அநுமாநத்தில் பராமர்ஶம் நாம் செய்வது. இங்கே அவமர்ஶம் தாயோடு கூடிய தகப்பன் செய்வது. அவன் அவமர்ஶம் கிடைத்தால் நாம் பலத்தை அடைவது நியதமாகிறது. (நிச்சிதமாகிறது.) நியதாப்தி தசை. அடுத்தாற்போல் நிர்வஹண மென்கிற கார்ய ஸந்தி. அடுத்த அங்கத்தில் “யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ்தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்” என்று முண்டக ச்ருதியும் கட ச்ருதியும் பாடியதை இங்கே நினைக்கவேணும். அவனை ஸாக்ஷாத்கரிக்கும் ஜ்ஞாநக் கண்ணை அவனே தரவேணும். ஸ்வாத்மந்யேவ— தன்னுமேலேயே; ஸ்வலக்ஷ்யம் ஸமாதிம்— தன்னை லக்ஷீகரிக்கும் ஸமாதி

யோகபலத்தை அவன் க்ருபையால் தன்னையே காட்டினாலல்லது அவனைக் காண முடியாது.

(இப்படிப் பேசிக்கொண்டிருக்கையிலேயே ஸுமதி தேவி வரும் பாதச் சலங்கை த்வநி இனிமையாய்க் காதில் விழுகிறது.) இம்மங்கள தேவதை வருவது மஹா சகுநம்.

ஸுமதி—(ப்ரவேசித்து) மஹாராஜாவுக்கு ஜய மங்களம் பொலிக! வேஸநேம ரே! மிக்க கார்யத்தின் நிர்வஹணத்திலும் மஹாராஜரையே எதிர்பார்க்கிறோம்.

ராஜா—என்பாமில்லை. ஸர்வமும் ஸர்வஜகதந்தர்யாமியான ஓர் புருஷனு டையதல்லவா?

ஆயோபக்வ்யாஹ்ருதிமிபமேசோராதிகதம்ஸ்ஸரீரம்
ஸத்தாஸ்தேய்ப்ரதஸ்மைஷ்டேஷு ததாயத்தமேதத் |
விச்வம் வ்யாப்நோதி ஸமவதி வ்யாவஹாரஸ்ய ஸ்ருஷ்டே
ஸம்ஹீர்ணாஷ்க்ருதசரீராம் மாஹதே வித்வ்யாத்திஃ ||

இது ப்ரதாநப்ரதிதந்த்ராதிகாரத்தில் முதல் ச்லோகம். இது வேதாந்த ஸித்தாந்தத்தின் உயிர். இதை உத்தேசித்து வேதாந்தத்தில் மற்ற பாகங்கள் உடல் போன்றவை. அவற்றையெல்லாம் வ்யாபித்த உயிர் அந்தர்யாமி ப்ராஹ்மணம். எல்லா வேதாந்த வாக்யங்களுக்குள் இந்த உயிருடல் ஸம்பந்த வாக்யம் உள்ளேபுகுந்து நின்று மற்ற வாக்யங்களுக்கு முள்ளேயிருந்து அவற்றின் உண்மைப்பொருள்களை நியமிக்கும்; வ்யவஸ்தை செய்யும். உள்ளே யிருந்து வேதியர் வேதத்தின் உட்பொருளை விளக்கும். வெளிப் பொருள்களோடு நிற்காமல் உள்ளே புகுந்து உட்கருத்தையுமறியச்செய்யும். பேதவாக்யங்களுக்கும் அபேதவாக்யங்களுக்கும் மத்யத்தில் நின்று அவற்றுக் குள்ளேயும்நுழைந்து நின்று எல்லா வாக்யங்களுக்கும் ஸர்வாந்தரமான ஹார்த்த உட்பொருளை விளக்கி மேலுக்குத் தோன்றும் விரோதங்களை நீக்கும். ஏக வாக்யமாக ஒன்றுபடுத்தி கடனை செய்யும். ஹார்த்த ச்ருதி தானே விருத்தம் போலத் தோன்றும் மற்ற எல்லா ச்ருதிகளின் ஹார்த்தத்தை (உள் உண்மை ஹ்ருதயத்தை) விளக்கு மென்று ரஸம். தத்த்வமஸி வாக்யத்தில் த்வம் என்பதின்மேல் பொருளான ச்வேதகேது வெனும் ஜீவனுக்குள் உயிராய் நுழைந்து நின்று தத் என்பதோடு ஒன்றாக்கி வாக்கியத்தை ஸமஞ்ஜஸமாக்கும்.

வித்வ்யாத்திஃ—ச்ருதி மனத்திற்கு உள்நிற்கும் ஹார்த்தமான உள் கருத்தை என்று பொருள். ச்ருதிகளின் கம்பீரமான (ஆழ்ந்த உள்ளே ஹ்ருதயத்திற்குள் புகுந்து கிடக்கும்) அபிப்ராயங்களுக்கும் உள்ளே நுழைகிறான். வெளியே காணப் படும் மேல் பொருளோடு நிற்காமல் உள்ளே ஆழத்தில் நுழைந்து உள்பொருளில்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்

ழைகிறான். உள்ளேயுள்ள ஸர்வாந்தரமான ஆநந்தமய ஆத்மாவான ஆநந்த வெள்ளத்தில் மூழ்கிறான். [illegible]தகமிராம், புருஷர் வாக்கால் ஆக்காதது; ஒருவரும் செய்யா மறைகள். அவற்றின் பொருளை அவற்றிற்குள் ஒரு மறை வாக்யத்தைக் கொண்டே அறியவேணும். அவற்றுக்குள் விரோதம், கலஹம் போலத் தோன்றுமிடத்தில் அவற்றிற்குள் ஒன்றான மற்றோர் மறை வாக்யத்தைக் கொண்டே உட்பொருளைத் தெளியவேணும். அந்தர்யாமியாயிருந்து தான் ஸ்ருஷ்டமான ப்ரபஞ்சம் முழுவதையும் பரமாத்மா வ்யாபிப்பது. பரமாத்மாவின் சிதசித் ப்ரபஞ்ச வ்யாபகத்வமே அந்தர்யாமித் தன்மையால்தான் ஸித்திப்பது. உட்பொருளான பரமாத்மா வெனும் உயிரை ப்ரபஞ்ச வ்யாபகமாகக் கண்ணாடி போல் விளக்குவது இந்த அந்தர்யாமி வாக்யம். இந்த வேத வாக்யம் வ்யாபகாதர்சமாகும். அந்தர்யாமி உயிராக ப்ரஹ்மம் வ்யாபித்திருப்பதை உள்ளுயிராக எல்லா சிதசித்துக்களையும் வ்யாபித்திருக்கு முள்ளுண்மையை பூதக்கண்ணாடிபோலக் காட்டும் மறை வாக்யம். 'உடன் மிசை யுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன் பரந்ததண் பரவையில் நீர்தொறும் பரந்துளன் பரந்தவண்டமிதென' என்றும் இந்த ப்ரதாநப்ரதிதந்த்ர உண்மையைக் கண்ணாடிபோல ப்ரத்யக்ஷமாகக்காட்டுவது அந்தர்யாமி ச்ருதி. ([illegible]) என்று வ்யாபகாதர்ச பதத்தின் பொருளாக ஸ்ரீ அஹோபில ஸ்வாமியின் ப்ரபாவிலாஸ உரை. வ்யாபக மந்த்ரங்களிலும் வ்யாபகமான மூல மந்த்ரம் வ்யாபகாநாம் வ்யாபகமான கண்ணாடி. ஆதி ரூபத்தைக் காட்டும் மூலக் கண்ணாடி. வேதங்கள் தம் தலையில் வைத்துக்கொண்டு அவற்றின் உட்பொருளைக் காட்டும் கண்ணாடி. [illegible] ஸ்ருதமாக மநு; வேத வ்ருக்ஷ சாகைகளின் தலையிலுள்ள மூலம். மந்த்ரங்கள் அத்ருச்யமான தேவதா ஸ்வரூபத்தை மனத்திற்குக் காட்டுமென்பர். தன் ஆத்மாவெனும் ஹவிஸ்ஸைப் பரமாத்மாவிற்குள் ஸமர்ப்பிக்கையில் அந்த அத்ருச்ய மூல தேவதையைக் காட்டும் மூல மந்த்ரம். 'ஓமித்யேனை வாநுஸ்மரணீயம்'. மூலம் மூலத்தால் விளங்குவது ரஸமே. வ்யாபகக் கண்ணாடி என்பது நம் கண்ணுக்குக் காண வரிய ஸூக்ஷ்மப் பொருள்களை ஸ்தூலமாகக் காட்டும் பூதக் கண்ணாடி. (விஸ்வம் பஸ்யதி [illegible]) கண்ணன் சரீரத்தில் சேதநாசேதந ப்ரபஞ்சம் முழுவதையும் ப்ரத்யக்ஷமாகக் காணச்செய்தது அவன் கொடுத்த திவ்ய சக்ஷுஸ்ஸு. பரமாத்மா எங்கும் அத்யந்த ஸூக்ஷ்மமாய் மறைந்து வ்யாபித்திருப்பதை ஸ்பஷ்டமாய் நமக்குக் காட்டும் கண்ணாடி இது. கண் காண வரிய ஸூக்ஷ்மத்தைப் பெருக்கி ஸ்தூலம் போல் காணச்செய்வது பூதக் கண்ணாடி. மற்ற வ்யாபக மந்த்ரங்களும் இப்படிக் காட்டும் கண்ணாடிகள் தான். அந்த வ்யாபகங்களிலும் வ்யாபகமான கண்ணாடி இந்த மூலம். சரீரம் என்பதின் வைதிக லக்ஷணத்தை விளக்குவது அந்தர்யாமி ச்ருதியும் மூல மந்த்ரமு மாகிய கண்ணாடிகள். உள்ளிருந்து நியமித்துக் கொண்டு, உடலான உயிர்களும் அசேதநங்களும் 'ம்ருத மாகாமல்' அஸத்தா

சாமல் காக்கும் அம்ருதமான அந்தர்யாமி ஆத்மா நாராயண சப்தத்தால் அவனை யாதாரமாக உடைமையும், நமஸ்ஸப்தத்தால் பாரதந்த்ரியமான நியாம்யத்வத்தையும், ப்ரணவத்தால் சேஷத்வத்தையும் குறிப்பதென்பர். சரீரத்தின் லக்ஷணங்களான ஆதேயத்வத்தையும் நியாம்யத்வத்தையும் சேஷத்வத்தையும் கண்ணாடியில் போலக் காட்டும் மூன்று பதங்கள். 'நாராயணாய நம: ஓம்' என்றும் அந்வயித்துக் கொள்ளலாம். 'ஆதேயத்வ ப்ரஹ்ருதி நிபந்தே'— ஆதாரமில்லாமல் நிற்கவே முடியாதென்பது நாம் எளிதில் தெரிந்து கொள்வது. நியாம்யத்வமும் சேஷத்வமும் அறிவது கஷ்டம். ஆதேயத்வத்தை முந்தி அறியலாம். உயிர் உடம்புக்கு ஆதாரம்; உடம்பைத் தாங்குவது. நம் உயிரை நாம் தாங்குவதில்லை. அதை மற்றோர் பெரிய உயிர் நாம் தூங்கும் ஸமயத்தில் தாங்குவதை நாம் எளிதில் ஊஹிக்கலாம். உடம்பை, கட்டில், படுக்கை முதலியவைகள் தூக்கத்தில் தாங்கும். உயிரை எந்த 'பர்யங்கம்' தாங்குகிறது? உயிர் எங்கே படுத்துத் தூங்குகிறது? உயிருக்கு உயிர் யார்? உயிர் எல்லாவற்றுக்கும் உயிரான ஸர்வாத்மாவுக்குள் நிம்மதியாய்ப் படுத்து உறங்குகிறது. அப்பொழுது மூச்சு விடும் ப்ராணன்களை யார் மூச்சு விடச் செய்கிறார்? ப்ராணன்களுக்குப் ப்ராணன் பரமாத்மாவே யல்லாது நாமல்ல. விழித்துக்கொள்கையிலும் மூச்சுக்களின் வ்யாபாரம் நம்மாலல்ல.

[illegible] என்று குருவான அஜாதசத்ரு ஜாநச்ருதியை ப்ரச்நம் பண்ணி ஹ்ருதயத்திற்குள்ளே பரமாத்மாவிடத்தில் சயநித்திருப்பதை விளக்கினார். ஆதாரமில்லாமல் நாம் இருக்க முடியாதென்பதை நாமெளிதில் ஊஹிக்கலாம். மூன்று சரீர லக்ஷணங்களில் முதலில் ஆதேயத்வத்தை வைத்ததின் கருத்து இது. 'கேந ப்ராண: ப்ரைதி யுக்த:' என்ற இது முதலிய கேள்விகளைக் கேட்டு உள்ளே உயிராயிருந்து எல்லாவற்றையும் நியமித்து நடத்துவது ஸர்வாந்தர்யாமி என்று கேநோபநிஷத்தால் விளக்கப்பட்டது. நம்மிடத்தில் எல்லையற்ற ப்ரியமே 'திருமால்' பரமாத்மாவின் ஸ்வபாவமென்றும், நம்முடைய ஸந்தோஷத்தில் அவனுக்கு நம்மிலும் மிக்க ஸந்தோஷமென்றும், நமக்கு பத்நீ, பர்த்தா, புத்ரர், வித்தம் முதலிய எல்லாம் ப்ரியம் தரும்படி அவனே ஆசைப்பட்டு ஸங்கல்பிக்கிறான் என்றும், 'ஆத்மநஸ்து காமாய ஸர்வம் ப்ரியம் பவதி' என்பதால் மைத்ரேயீ ப்ராஹ்மணம் காட்டிற்று. 'உள்ளுயிரான அந்தர்யாமி தான் உனக்கு அம்ருதம், பார்யா, பர்த்தா, புத்ர, வித்தாதிகளெல்லாம்' என்று அந்தர்யாமிப்ராஹ்மணமும் கூறிற்று. 'ஸர்வாந்தரமான அந்தர்யாமி ஸர்வஸ்மாத் ப்ரேய:' எல்லாவற்றைக் காட்டிலும் மிக்க 'ப்ரியமானது' என்று ப்ருஹதாரண்யகமும் காட்டிற்று. அவனுடைய ப்ரீதியே நமக்கு ப்ரியமான உத்தேச்யம். '[illegible]' என்ற சேஷத்வ ரஸ உண்மையை (சேஷியின் உகப்பே முக்யம்; அவன் உண்ட சேஷமாக, போகங்களை ரஸிக்க வேணுமென்னும் உண்மையை) 'ஆத்மநஸ்து காமாய ஸர்வம் ப்ரியம் பவதி' என்று ஸ்பஷ்டமாகக் காட்டிற்று. (தொடரும்.)

ரிய புண்ய கார்யங்களையுடைய இந்த மரங்களை நீங்கள் பாருங்கள்; காற்று மழை வெயில் பனி இவைகளினாலுண்டாகும் கஷ்டங்களைத் தாங்கள் பொறுத்துக்கொண்டு நமக்கு அந்த கஷ்டங்களில்லாதபடி செய்கின்றன]

‘ அஹோ ஏஷாம் வரம் ஜந்ம ஸர்வப்ராண்யுபஜீவநம் ।
ஸுஜநஸ்யேவ யேஷாம் வை விமுகா யாந்தி நார்த்திந: ॥’

[ஸர்வ ப்ராணிகளும் ஜீவித்திருப்பதற்குக் காரணமான இந்த மரஞ்செடிகளுடைய பிறவியை உயர்ந்த ஜந்மாவென்றே சொல்லலாம். ஸாது மனிதர்களை யாசித்தவர்கள் எப்படி ஸர்வ பலன்களையும் அடைகிறார்களோ, அப்படியே இம்மரங்களை ஆச்ரயித்தவர்களும் ஸர்வாபீஷ்டங்களையும் அடைகிறார்கள்.] இம்மரங்கள் பிறர்க்குப் பண்ணு முபகாரங்களை வ்யக்தமாகச் சொல்லுகிறது மேல்வாக்யம்.

‘ பத்ரபுஷ்பபலச்சாயாமூலவல்கலதாருபி: ।
கந்தநிர்யாஸபஸ்மாஸ்திதோக்மை: காமாந் விதந்வதே ॥’

[இந்த மரங்கள் இலை, புஷ்பம், பழங்கள், நிழல், வேர், கிழங்கு, பட்டை, வாஸனை, விறகு, பிசின், கரி, கொழுந்து, இவைகளையெல்லாம் பிறர்க்கே கொடுத்து த்ருப்தியைச் செய்கின்றன.]

‘ ஏதாவஜ்ஜந்மஸாபல்யம் தேஹிநாமிஹ தேஹிஷு ।
ப்ராணைரர்த்தைர்தியா வாசா ஶ்ரேய ஆசரணம் ஸதா ॥’

[இப்படி மிகவும் தாழ்ந்த ஜந்மங்களான மரங்கள் தங்களுடைய ஜந்மங்களையே பிறருடைய ப்ரயோஜநத்திற்காகவே ஆக்கிவைத்தால், இவைகளைக் காட்டிலும் மிகவும் உயர்ந்த ஜந்மாக்களாகத் தங்களைத் தீர்மானித்திருக்கும் மனிதர்கள் மற்றை ப்ராணிகள் விஷயத்தில் உயிரினாலும், உயிரைக்காட்டிலும் உயர்ந்ததாக நினைக்கப்படுகிற பணத்தினாலும், புத்தியினாலும், வாக்கினாலும், பிறருக்கு உபகாரத்தைப் பண்ணினாலன்றோ மனிதனாகப் பிறந்த பிறவி பயன் பெற்றதாகும்.] என்று பாகவதம் 10ம் ஸ்கந்தத்தில் அருளிச்செய்திருப்பதுபோல மனுஷ்ய ஜந்ம ஸாபல்ய ஹேதுவான பரோபகார ரூப மஹா தர்மங்கள் மரங்களிடத்திலிருந்தாலும்,

‘ யோஹம் நிரஞ்ஜந விநிரஞ்ஜந உந்யகாமைர: । வ்ருக்ஷேஷு ஸூர்யேணேவ’

என்கிறபடியே அவைகள் அஜ்ஞாநமாகிற அந்தகாரத்தாலே சூழ்ந்திருக்கிறபடியால் ‘ பஶுபி: ஶாஸ்த்ராவஸிதா ஹ்யவஸிதாஶ்ச போதம் வொஸாஶ்ச க்ஷுந்நஜா க்ஷயிகாலஹாஜ: ’ என்கிறபடியே தர்ம தத்வத்தை அப்யஸிக்கவும் அறிந்துகொள்ளவும் அநுஷ்டிக்கவும் யோக்யமில்லாத ஸ்தாவர ஜந்மமாக இருக்கையாலே தர்ம கார்யங்களோடிருக்கச் செய்தேயும் அக்கார்யங்கள் ப்ரயோஜந மற்றுக் கிடக்கையாலே ‘ வ்ருதைவ ஸமதீதா யதா ஹ்யயம் ஜந்ம ஸந்ததி: ’ என்கிறபடியே ஜ்ஞாநவான்களுக்கு ஶோசநீயமாய்ப் பயனற்ற ஜந்மங்களாக நினைக்கக்கூடியதாகும்.

இது நிற்க, ஸஞ்சார யோக்யதை இல்லாமையாலே ஸர்வ காலத்திலும் துக்க ஸாகரத்திலழுந்திக் கிடக்கும் ஸ்தாவரங்கள் போலன்றிக்கே, ஸஞ்சார யோக்யமான கால்களும் சிறகுகளுமிருக்கையாலே கீழே சொல்லப்பட்ட கஷ்டங்களில்லாத திர்யக்குகள் விஷயத்தில் ஆராய்ந்து பார்ப்பதாவது :— பசு பக்ஷிகளான திர்யக்குகள்

'ஐஹாவி விஷயஸம்வேதாயதா தேஹம் ப்ரவர்த்தக: |
தநுஷ்யாஸ்திர்யக்யோநேஷ்வ ப்ருதக்யோகா விசேஷத: ||'

[புழு முதலான ப்ராணிகளுக்கும் சப்த ஸ்பர்சாதி விஷய ஸுகங்கள் ஈச்வரனால் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகையினால் புழுக்கள் முதலான திர்யக்குகள் மனிதர்களுடைய ஸுகங்களைக்காட்டிலும் வேறுபட்ட பல ஸுகாநுபவங்களை உடையன.] என்று அநுசாஸந பர்வத்தில் 171 ம் அத்யாயத்தில் சொல்லுகிறபடியே திர்யக்குகளுக்கு ஸ்தாவரங்களுக்கில்லாத 'கண்டு கேட்டு உற்று மோந்து உண்டு உழலும் ஐங்கருவி கண்ட, வின்பங்கள் அதிகங்களானாலும் [பாரதம் சாந்திபர்வம் 178 ம் அத்தியாயத்தில்] வழி நடுவில் தனிகனான ஓர் வைச்யனால் அவமானப்படுத்தப்பட்ட காச்யபன் என்கிற ப்ராஹ்மணன் தான் ஏழைத்தனத்தோடிருக்க இஷ்டமில்லாமல் இறந்துபோக ப்ரயத்நப்படுவதைப் பார்த்த தேவேந்திரன் கருணையினால் அந்த ப்ராஹ்மணனுக்கு புத்திசொல்வோம் என்று நினைத்து நரியின்ரூபத்தை எடுத்துக்கொண்டு ப்ராஹ்மணனைப் பார்த்து

'அஹோ ஸித்தார்த்ததா தேஷாம் யேஷாம் ஸந்தீஹ பாணய: |
பாணிமத்ப்ய: ஸ்ப்ருஹாஸ்மாகம் யதா தவ தநஸ்ய வை ||
ந பாணிலாபாததிகோ லாப: கச்சந வித்யதே |
அபாணித்வாத்வயம் ப்ரஹ்மந் கண்டகம் நோத்தராமஹே ||
ஜந்தூநுச்சாவசாநங்கே தம்சதோ ந கஷாம வா |
அத யேஷாம் புந: பாணீ தேவ தத்தௌ தசாங்குளீ ||
உத்தரந்தி க்ருமீநங்காத் தம்சதோ நிகஷந்தி ச |
வர்ஷ ஹிமாதபாநாம் ச பரித்ராணாநி குர்வதே ||
சேலமந்நம் ஸுகம் சய்யாம் நிவாதம் சோபபுஞ்ஜதே |
அதிஷ்டாய ச காம் லோகே புஞ்ஜதே வாஹயந்தி ச ||
யே கல்வஜிஹ்வா: க்ருபணா: ஸ்வல்பப்ராணா அபாணய: |
ஸஹந்தே தாநி து:காநி திஷ்ட்யா த்வம் ந ததா முநே ||'

கைகளோடிருக்கிற மனிதர்கள் பெரிய பாக்யசாலிகளன்றோ? உனக்கும் பணவிஷயத்தில் அதிகமான ஆசையிருப்பதுபோல, நாங்கள் கைகளோடிருப்பதைக்காட்டிலும் வேறு உயர்ந்த லாபமொன்றுண்டோ? எங்களுக்குக் கைகளில்லாததினால் எங்கள் உடம்பில் பாய்ந்து கிடக்கிற முட்களை நாங்கள் எடுக்க முடியாதிருக்கிறோம். எங்களுடைய தேஹத்திலிருந்துகொண்டு மாம்ஸ ரத்தங்களைப் புஜித்துக்கொண்டிருக்கிற பலவித புழுக்களையும் பூச்சிக்களையும் எடுக்கமுடியாமலிருக்கிறோம்.

ஈச்வரனால் கொடுக்கப்பட்ட பத்து விரல்களோடு கூடிய கைகளோடிருக்கிறவர்கள் தேஹத்திலிருக்கிற முட்களையும் கடிக்கிற புழுக்களையும் எடுத்துவிட்டு ஸுகமாகஇருக்கிறார்கள். கைகளிருப்பதால் மழை வெயில் பனிகளினால் கஷ்டப்படாதபடி தங்களை ரக்ஷித்துக்கொள்ளுகிறார்கள்.

ஸ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

கைமுதிக ந்யாய விசாரம்

[ஸ்ரீ உ வே மதத்ரயநிரூபக, வித்வான், காளி ரங்காசாரியார் ஸ்வாமி.]

ஶ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரே ப்ரஸ்துதே அதிகாரிவிபாகாதிகாரே

'விஶிஷ்டவதி வா நேதி ஸம்ப்ரயோகவ்யாக்த வேஷிதாம் ।
ந ஸம்ப்ரயோகத்ர தத்ஸக பரிஹார காத்தநாம் ॥'

என்கிற சணக்கிலே அதிகாரிக்கு கைமுதிகந்யாயத்தாலே ப்ரஸக்தியில் ப்ரஸங்கமில்லை, இதி ஸூசிதே । கஸ்ய த்ருஷ்டேதி சாதிவத் । அயோக்ய-
ஸ்த்ர பூர்வோக்த ப்ரயோகாதி த்ருஷ்டம்

'கைமுத்ய ந்யாய ஸம்ஸித்தி: கார்யார்த்தாவதிஷ்யதே ।
ஸதீத ஸம்பந்த: காவாதார ஸாரஸீமாம் ॥'

இதி லக்ஷணம் உதாஹரணம் ச த்ருஷ்டம் । தத்ர பூர்வவாக்யார்த்தாபேக்ஷயா
ந்யூநதாவாதநேந உத்தரவாக்யே கைமுதிக ந்யாய இதி । தீக்ஷிதஶதோ
தாஹரணாதிஷு ச

'அயோஜயச்சிலாக்ஷரா ஜீவஞ்ஜீவப்ரஹாஹர: ।
அந்யஜீவப்ரஹாரம் ஹரஸ்! ஹரதீதி கிமத்புதம் ॥'

இத்யத்ராபி பூர்வோக்தார்த்தாபேக்ஷயா ஸத்யப்யுத்தர வாக்யார்த்தஸ்ய ந்யூந
தாவஸாய புராணாதி ந்யாய ஸித்தாந்த: । யதா தண்டாபூபிகாந்யாயே தண்ட
பக்ஷணாபேக்ஷயா அபூப பக்ஷணஸ்ய ஸுகரத்வம் தத்வத் க்ருத்ய:' இதி வததே ।
ஸந்தாத்ருஶீ ரீதி: ப்ரக்ருத ஶ்லோகே ந த்ருஶ்யதே । விஶிஷ்டவதீதி ஶ்லோகே மம
ஸமாஶ்ரயாபேக்ஷயா ஸாமாந்யாஶ்ரயணஸ்ய ந்யூநதா வசநம் நேஷ்டம் ।
யத்யபி—

'தவாம்ருத ஸ்யந்திநி பாதபங்கஜே நிவேஶிதாத்மா கதமந்யதிச்சதி ।
ஸ்திதே஽ரவிந்தே மகரந்தநிர்பரே மதுவ்ரதோ நேக்ஷுரகம் ஹி வீக்ஷதே ॥'

இதி உக்த்யாதிதோதாஹரணாதௌ பூர்வவாக்யஸ்தார்த்தாபேக்ஷயா உத்தர
வாக்யஸ்தார்த்தஸ்ய ஸௌகர்யம் த்ருஷ்டம், ததா ஸமாஶ்ரயணஸ்ய ஸௌகர்யாதிகாரே
ந விகைமுதிக ந்யாய ஸஞ்சார: கதமிவ ப்ரஸங்கேந வா ।

ஶாண்டில்யஸ்ம்ருதிஸ்த: அயம் ஶ்லோக: பஞ்சகாலபராயணாநாம் பாகவதாநாம் ஸ்வரூபவைலக்ஷண்யம் அநந்யப்ரயோஜநத்வம் ப்ரகாஶயதி । தத்ர பாகவ-தாபசாரஸ்ய ப்ரஸக்திரேவ நாஸ்தீத்யர்த்த: ।

'வக்ஷ்யாமி ஸ்தாவரம் ஜங்கமம் வ்யாப்தோ ஹி ஸர்வத்ர விபு:'

இத்யாத்யாரப்ய 'ப்ராஹ்மணாந் ஸம்பூஜயேத் பக்த்யா நித்யம் பாகவதாந் ந்ருப' இத்யந்தமு-க்த்வா 'ஸித்திமேதீதி' ஶ்லோகாநந்தரம்,

'கேவலம் பகவத்பாத ஸேவயா விமலம் மந: ।
ந ஜாயதே யதா நித்யம் தத்பக்தசரணார்சநாத் ॥' இதி படிதம் ।

தத்ர பகவத்பாதஸேவநாயாம் பாகவதஸேவாயா: ப்ராதாந்யேந ப்ரதிபாதநாத் ஶரணாகதிஸ்வரூபம் ப்ரதீயதே । ஶரணாகதிஶப்தவாச்யா ஹி பக்திநிஷ்டா ஸ்வாபந்யாஸநிஷ்டா வா தத்ர ந த்ருஶ்யதே । அதஸ்தத்ர சௌர்திகந்யாய ப்ரதிபாதந பரோऽயம் ஶ்லோக இதி கதம் ஸங்கச்சதே? .

அபிச 'யத்ராத்ரீணாம் பஹூநாம் ப்ரயஸா ஜந்மநாம் ஆராதநாந்தரம் ப்ரயோகவாந் ஶரண்யாநாம் ஶரண்யாஸூக்திபிர்வா ப்ராப்தோ வா ஜநா: ஜந்மயந்தி யோகவா ந ராத்ரீணாம் பஜதி ஹி நஸ்த ஸாரண்யேநாயோ ப்ரஹ்மாநாதீதி ஸேவாஜதீர்வாஹ்யோ பகீயந்தாஸ்தீதி,(தை. ஸம். 5. 4. 3. அநுவாகே) ப்ரத்யக்ஷவிசாரணாயே பகவத்ஜீவஸாயாம் உபஸாத்யாயே பயோஹோமம் விதாய ஶரண்யதிஷா நாராரண்யமேயம் பூர்ணாஹு ஹோமஸாயநகம் விதாய அநந்தரம் தத்பூர்ணம் க்ருதம் । அத்ர உபக்ரம்ய பயோஹோம ப்ரஶம்ஸாவ-ஸரவஸீ ப்ரூதி: । ந து ஶரண்யதிஷா ஶரண்யமேயபூர்ணஹோமநிர்வாஹ 'ந ஹி நிரா நித்யம் நிர்திதம் ப்ரவர்ததே அவிதம் விஷயம் ஶோதம்'இதி ந்யாயாதித்யர்த்த: । ததத்ர ஸித்திமேதீதி ஶ்லோக: பாகவத ப்ரஶம்ஸா பரவ ; ந து சௌர்திகந்யாயஸித்தாய ப்ரதிபாதநபர: இதி ப்ரதிபாதி ந து ஸ்வாபந்யாஸநிஷ்டாயாம் ப்ரமாணமேவ ந ஸ்வீக்ருதமிதி ।

அத்ர வ்யாவ்யாக்ருஹி: கிஷ்கிந்தயா அநந்யவண்ணநேக்ருதேபி சௌர்திகந்யாயலக்ஷண ஸம்பந்தோऽத்ர ந ப்ரதிபாதிதமேவ ; "ந ஸம்ஶயோஸ்தி தத்பக்த பரிசர்யாரதாத்மநா"மிதி வாக்யேऽபி க்வசித் த்ருஶ்யதே । அதஶ்ச சௌர்திக ந்யாயத்தாலே, இதி வதம் கதமத்ர ஸங்கச்சதே? இதி ॥

ஸ்ரீ꞉

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம꞉

நற்போது போக்கு

[ஸ்ரீ. உப. ஓரகடம். கோ. ஸுதர்சநாசாரியர்.
தமிழ்ப்பண்டிதர். அவளூர்.]

ஒரு ஸமயம் துர்யோதநாதிகளுடைய யாகத்துக்குப் பல தேசத்து ராஜாக்கள் வந்திருந்தார்கள். அப்பொழுது துர்யோதநாதிகள் ஸ்ரீமத் த்வாரகையின் அமைப்பையும், அதன் அரணின் வலிமையையும் அதன் நீர்வள நிலவளங்களையும், அங்குள்ள தந ஸம்ருத்தியையும், அங்கு ஸ்ரீக்ருஷ்ணன் எழுந்தருளியிருக்கும் மதிப்பையும், ஆகிய எல்லாவற்றையும், விஸ்தாரமாகச் சொல்ல, அரசர்கள் கேட்டு அப்பிரானோடு நட்புக்கொள்ள விரும்பிப் பாண்டவ துர்யோதநாதிகள் எல்லாருடனும் புறப்பட்டு ரைவதக பர்வதத்தை யடைந்து, தாங்கள் ஸேவார்த்திகளாய் வந்த செய்தியை ஸ்ரீக்ருஷ்ணனுக்குத் தெரிவிக்குமாறு ஓராளை அவரிடம் அனுப்பினர். ஸ்ரீக்ருஷ்ணனும், இவர்கள் திரளாய் வருவதற்குக் காரணமென்னே? என்று சிந்தித்து ஸ்ரீபலராமன் ஸாத்யகி என்னுமிவர்களையும் கூட்டிக்கொண்டு, பல்வகைப் படைக்கலங்களுடனும், பரிவாரங்களுடனும் ரைவதக மலைக்கு எழுந்தருளி, அவரவர்க் குரிய ஆஸநங்களில் அவர்களை அமரும்படி செய்து குசலப்ரச்நமும் பண்ணி, தாமும் ஒரு திவ்யஸிம்ஹாஸநத்தில் எழுந்தருளியிருந்தார். அப்பொழுது ஸ்ரீநாரதபகவான் அங்கே எழுந்தருளி ஸ்ரீக்ருஷ்ணனை ஸேவித்து,

‘ஆஶ்சர்ய꞉ ஸர்வதேவாநாமேகஸ்த்வம் புருஷோத்தம꞉ ।
தந்யஶ்சாஸி மஹாபாஹோ லோகே நாந்யோஸ்தி கஶ்சந ॥’

[ப்ரபோ! புருஷோத்தம! எல்லாத் தேவதைகளுக்குள்ளும் நீர் தான் ஆச்சர்யபூதர்; நீர்தாம் தந்யர்; உம்மைப் போல் மற்றொருவரும் இந்தலோகத்திலில்லை]
என்று விண்ணப்பம் செய்தார். இதைக் கேட்டு க்ருஷ்ணன் மந்தஹாஸம் செய்துகொண்டு மஹர்ஷியைப் பார்த்து,—

‘ஆஶ்சர்யோஸ்ம்யேவ தந்யஶ்ச தக்ஷிணாபிஸ்ஸஹேரித꞉,

[தக்ஷிணைகளுடனன்றோ நான் ஆச்சர்யனாகவும் தந்யனாகவும் விளங்குபவன்!]
என்று கூறியருள, மஹர்ஷி அஞ்ஜலி ஹஸ்தராய், ‘ஸ்வாமிந்! ஸந்தோஷம்; அறிந்துகொண்டேன், த்ருப்தனானேன், விடைகொள்ளுகிறேன்’ என்று அவ்விடத்தை விட்டுப்புறப்பட்டுப் போக ஆரம்பித்தார். அப்போது அங்கு குழுமியுள்ள அரசர்கள் நாரதபகவான் சொல்லிய விஷயத்தின் தத்வத்தை அறியாமல் ஸ்ரீக்ருஷ்ணனுடைய

திருமுகமண்டலத்தை எறிட்டுப் பார்க்க ஸ்ரீக்ருஷ்ணன் ‘‘அந்த மஹர்ஷியையே கேளுங்கள்; அவர் விளங்கச் சொல்வர்’’ என்றுசொல்லி நாரதரையும் அவ்வாக்யத்தின் பொருளை அவர்களுக்கு நன்கு விளக்கும்படி நியமித்தார். அப்போது நாரத பகவான் சொல்லுகிறார்:—

முன்னொருகால் நான் ஸ்நாநாதி கர்மாக்களைச் செய்வதற்கு ஸூர்யோதயத்திற்கு கங்கைக் கரையை யடைந்தேன். அங்குக் கூப்பிடு தூரம் அகலமும், அதில் இரட்டிப்புத் தூரம் நீளமுமான பாசி பிடித்துக்கிடந்த பெரிய வடிவத்தோடு விசித்ரமாக இருந்த தொரு ஆமையைப் பார்த்து

‘கூர்மாஶ்சர்ய ஶரீரோऽஸி கச்சப தந்யோऽஸி ஸம்மத꞉ |
ஸ்வச்சந்தே ஸ்வாஶ்சர்யாம் ஸ்வாஶ்சர்யாம் ஸஞ்சரத꞉ |
தோயே வஸஸி நிஶ்ஶங்க꞉ கிஞ்சிதந்யதசிந்தயந் ||’

[ஆமையே! உன் சரீரத்தின் அழகையும், நீ நிர்பயமாயும், நிர்விசாரமாயும் ஸஞ்சரிப்பதையும் பார்த்தால் நீயே தந்யன், நீயே ஆச்சர்யமான சரீரத்தை யுடையவன்] என்று ச்லாகித்தேன்.

அதற்கு அவ்வாமை மநுஷ்ய வாக்காலே ‘ஹே பகவன்! என்னிடம் நீர் சொன்ன குணங்கள் என்னிடமில்லை; என்னைப்போல் பலவாயிரம் ப்ராணிகளைக் கொண்டுள்ள இக் கங்கையன்றோ அத்தகைய குணங்கள் வாய்ந்தவை’, என்றது. நான் மீண்டும் கங்கையை நோக்கி ‘ஸுரநதியே! நீயே தந்யை; நீயே ஆச்சர்யை!’, என்று முன் ஆமையினிடம் கூறியதுபோலவே அதையும் ச்லாகித்தேன். அதைக் கேட்ட அக்கங்கை ஒரு வடிவமெடுத்துக்கொண்டு என்னெதிரில் வந்து ‘ஸ்வாமி நான் ஆச்சர்யையு மன்று தந்யையு மன்று; என்னைப்போலவே பல நதிகள் வந்து விழப்பெற்ற ஸமுத்திரத்தினிடத்தன்றோ ஆச்சர்யமும் தந்யதையும் (பேறும்) உள்ளன’ என்று சொல்லிற்று.

அதைக்கேட்ட நான் அச்சமுத்திரத்தைக் கண்டு முன்போலவே ச்லாகிக்க அதுவும், ‘நீர் சொன்ன குணங்கள் இரண்டும் என்னிடத்திலில்லை, அவையிரண்டும் என்னைத் தாங்குகிற பூமியினிடத்தில்தான் உள்ளன’, என்றது.

நான் பூமியை நோக்கி முன்போலவே ச்லாகித்துச் சொன்னேன். பூமிதேவியும் வெட்கி ‘எனக்கு அக்குணங்கள் பொருந்தமாட்டா; எனக்கு ஆதாரமாயுள்ள குலபர்வதங்களுக்கே அக்குணங்கள் உள்ளன’, என்று சொல்லிற்று.

மீண்டும் நான் பர்வதங்களை அணுகித் துதித்தேன். அவை ‘எங்களிடம் நீர் ச்லாகித்துக் கூறும் குணங்களில்லை; எங்களைப்படைத்த ப்ரஹ்மாவினிடமே அக்குணங்கள் உள்ளன’, என்றன.

[torn]பு நான் நான்முகக் கடவுளை அணுகிப் பலவாறு துதித்து, முன் சொன்[torn] ஸ்வாமி! நீர்தான் ஆச்சர்யமானவர், தந்யர்'' என்றுரைத்தேன். அதற்[torn] நான் அத்தகைய குணங்களுடையேனல்லேன்; என்னையும் லோகத்தையும் [torn]குநின்ற நான்கு வேதங்களே தந்யமும் ஆச்சர்யமுமாகும், என்றார்

பின்னர் நான் வேதங்களை அநுவர்த்தித்து அவைகளை முன்போலவே சலாகித்தேன். அவ்வேதங்களும் நாங்கள் யஜ்ஞத்தின் பொருட்டாக ஏற்பட்டிருக்கிறபடியால் அவைகளுக்கே தந்யதையும் ஆச்சர்யமும் உள்ளன, எங்களிடம் அவையில்லை,, என்று கூறின.

அந்த யஜ்ஞங்களையும் அணுகி நான் அவ்வாறே கூற, அவை,

''[illegible] நாஸ்[illegible] வித்யந்தே
[illegible] விஷ்ணு: [illegible] கதி: ,,

[நீர் கூறிய குணங்கள் எங்களிடம் இல்லை; எங்களிடத்து ஹோமம் செய்த ஆஹுதியின் பயனை அளிப்பவன் ஸ்ரீ மஹா விஷ்ணுவே; ஆகையால் எங்கட்கு முக்யகதியான அந்த ஸ்ரீ மஹாவிஷ்ணுவினிடத்தில்தான் இக்குணங்கள் உள்ளன] என்றன.

அதைக்கேட்ட நான் ஸ்ரீ க்ருஷ்ணனையடைந்து அவனை ஸேவித்து ஆநந்தம் உள்ளடங்காமல் நீரே ஆச்சர்யர்; நீரே தந்யர் என்றேன். அதற்கு க்ருஷ்ணன் : தக்ஷிணையோடு கூடிய நான் தந்யனாகவும் ஆச்சர்யனாகவும் சொல்லப்பட்டிருக்கிறேன், என்றார்.

அரசர்களே! பரம்பரையாக இதுவரையில் சொல்லப்பட்டுவந்த ஆச்சர்யபூதன், தந்யன், என்னும் வார்த்தைகள் ஸ்ரீ க்ருஷ்ணனுக்கே தகும். ஆதலால் அவ்வார்த்தைகளைக்கொண்டு நான் அவரைப் புகழ்ந்து சொன்னேன். இப்பொழுது விளங்குகிறதன்றோ? என்று சொல்லி ஸ்ரீநாரதபகவான் அவ்வரசர்களிடை விளக்கிக் கூறிவிட்டு விடைபெற்றுச் சென்றார். இதனால் தக்ஷிணையோடு கூடிய எல்லா யஜ்ஞங்களுக்கும் பகவானே கதியென்று சொல்லப் பட்டதாகிறது.

இது ஹரிவம்சத்திற் சொல்லப்பட்ட கதை. இதைப் பெரியாழ்வார் தமது திருமொழியில்,

''ஆமையாய்க் கங்கையாய் ஆழ்கடலாய் அவனியாய் அருவரைகளாய்
நான்முகனாய் நான்மறையாய் வேள்வியாய்த் தக்கணையாய்த்தானுமானான்
சேமமுடை நாரதனார் சென்று சென்று துதித்திறைஞ்சக் கிடந்தான் கோயில்
பூமருவிப் புள்ளினங்கள் புள்ளரையன் புகழ் குழறும் புனல் அரங்கமே,

என்றருளிச்செய்தார். [பெரியாழ்வார் திருமொழி - 4 - 9 - 5 -]

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃॥

தேசிக ஸ்ரீஸூக்தி கத சோத்ய தூல வாதூலம்

(ஸ்ரீ . உப . வித்வான் தில்லையம்பூர் ச . வெங்கடாசார்யர் ஸ்வாமி)

ஸ்ரீமந் நிகமாந்தமஹாதேசிகன் முன்னவர்களைப் போல் கேவல கவியல்ல. சாஸ்த்ரம் காவ்யம் நாடகம் முதலியவைகளிலும் தமிழிலும் ஸ்ரீமந் நிகமாந்தமஹாதேசிகன் ஸாதித்திருக்கும் க்ரந்தங்கள் ஆயிரத்திற்கு மேலிருக்கும்.

'𑌸𑌰𑌸𑌂 𑌵𑌾𑌦𑌿 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑍀𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌾𑌯 𑌸𑍂𑌰𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌾𑌃' என்று தொட்டையாசாரியர் முதலான ஸ்வாமிகள் மனமார்ந்துச் சொல்லி அந்தஸ்வாமி திருவடிகளில் சரணவரணம் செய்திருக்கிறார்கள்.

அடியேனும் கவி விமர்சம் என்னும் கிரந்தத்தில்,

'𑌪𑍍𑌰𑌾𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌤𑌿 𑌕𑌵𑌯𑌃 𑌪𑌰𑍇।
𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶 𑌕𑌵𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌾𑌸𑍋𑌪𑌮𑌾𑌦𑌿𑌭𑌿𑌃॥'

என்று எழுதியுள்ளேன். அதாவது:- ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகன் ஸூக்திகளில் சப்தாலங்காரம் அர்த்தாலங்காரம் இரண்டும் வெள்ளமிட்டுப் பெருகுகிறது என்று.

'𑌶𑍇𑌷𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌹𑌾𑌰𑌤𑍋 𑌨𑌨𑍍𑌦 𑌨 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌪𑌿 𑌵𑌿𑌦𑍍𑌮𑌹𑍇' என்று பெரியபெருமாள் வசனப்படியிருக்க சிலர் தேசிகனின் ஸூக்திகளில் இரண்டு தோஷங்களை வெளியாக்கி அத்தோஷத்தையும் ஸமர்த்தித்து பாடத்தையும் மாற்றியிருக்கின்றார்கள். இப்பொழுது ஏற்கனவே வழங்கி வரும் பாடங்களை ஸரியானவை என்று பாணினிசாஸ்த்ரப்படி ஸகல பண்டிதர்களும் ஒப்புக் கொள்ளும்படி கீழே நிரூபிக்கப்படுகிறது.

யதிராஜஸப்ததியில்,

'𑌰𑌸𑌪𑌰𑌿𑌮𑌳𑌸𑌾𑌰𑌾𑌵𑌾𑌸𑌵𑍈𑌶𑍇𑌷𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌦𑍈𑌨𑍍𑌯𑌂
𑌲𑌵𑌣𑌵𑌣𑌿𑌜𑌃 𑌕𑌰𑍍𑌪𑍂𑌰𑌵𑌰𑍍𑌣𑌂 𑌕𑌿𑌮𑍍 𑌨𑍃𑌷𑍀𑌕𑌤𑍇'

[பச்சைக்கற்பூரத்திற்குள்ள ரஸவிசேஷம், பரிமளவிசேஷம் இவற்றால் ச்லாகா விசேஷம் உலகத்தில் மிகுந்து அதனால் அந்த கற்பூரத்தினுடைய விலை நாடு நகரமும் விளங்காநிற்க உப்புவியாபாரி தன்னுடைய உப்புக்கட்டியையே அதிக வெளுப்பு என்பது முதலான சில காரணங்களைச் சொல்லி ஸ்துதிப்பன்] என்பது ஒரு வகைப்பொருள். இந்த அர்த்தத்தில் ரஸபரிமள என்பதற்குக் கற்பூரத்தினுடைய என்ற பதத்தை மனத்தில் கொண்டு ஆசாரியன் அருளிச் செய்தார் என்று நிர்வாஹம். ரஸபரிமளங்களுக்கு அர்க்கத்தில் அந்வயமேயில்லை.

ஆகையால் இதில் சங்கைக்கு இடமேயில்லை. சிலர் நினைத்தபடி அர்க்கத்தில் அந்வயித்தாலும் ‘விசிஷ்டாந்யவிதௌ விசேஷணாம்ஶோபிவிதேய:’ ‘ஸவிசேஷணே ஹி விதிநிஷேதௌ விசேஷ்யபாதே விசேஷணமுபஸங்க்ராமத:’ என்ற, ந்யாயத்தாலும் கவிகளுடைய இம்மாதிரி வசனங்கள் அநேகமிருப்பதாலும் ஶிவஶப்தத்வம்ஸத்தால் ‘ஶிவீ ப்ரஸூ:’ என்று இம்மாதிரி பஹு ப்ரயோகங்கள் லோகஸித்தமாயிருப்பதாலுமிதைத் தோஷமாய் நினைக்க இடமில்லை.

ரகுவம்சம் முதல் ஸர்க்கம் 43 வது ச்லோகம்,

‘ஸரஸீஷ்வரவிந்தாநாம் வீசிவிக்ஷோபஶீதலம் |
ஆமோதமுபஜிக்ரந்தௌ ஸ்வநிஶ்வாஸாநுகாரிணம் ||’

(இதன் பொருளாவது ஸுதக்ஷிணையும் திலீபராஜனும் புத்ரார்த்தமாக வஸிஷ்டாச்ரமம் போகும் வழியில் அலைகளினால் சீதளமாகவும் உத்தம புருஷர்களான தம்பதிகளுடைய மூச்சுக் காற்று போலும் இருக்கிற தாமரை மலர்களின் வாஸனையை நுகர்ந்துக் கொண்டு செல்கிறார்கள் என்று.) இந்த ச்லோகத்திலும் வாஸனைக்கு சீதளத்வமும் மஹாபுருஷர்களை ஒத்திருப்பதும் ஆராய்ந்து பார்த்தால் இல்லை.

‘ஶாகேண ஶாகாநஜீகார:’ என்பது ந்யாய ஶாஸ்த்ர ஸித்தாந்தம். இங்கும் தாமரைப் புஷ்பத்திற்குத்தான் இரண்டு விசேஷணங்களும் பொருந்தும். இங்கு முன் சொல்லிய ந்யாயத்தால்தான் ஸமாதானம் சொல்ல வேண்டும். இல்லாவிடில் பொருந்தவராய்விடும். இப்படியிருக்க இவ்விஷயத்தை ஒரு தோஷமாக நினைத்து ‘உத்’ என்கிற பாடத்தை அமைப்பது ஸரியில்லை.

* * * * *

பகவத்த்யான ஸோபாநத்தின் பத்தாவது ச்லோகத்தில், ‘ஸமேதி ஹ்ருதயே’, என்பது பிழை. அதாவது ஸம தாது ஆத்மநேபதியாகையால் என்று மற்றொரு ஆக்ஷேபம்.

பீமஸேநரால் ஸம தாது ஆத்மநேபதியில் படிக்கப் பட்டாலும் அது உபயபதிதான். அப்படியே அநேக ப்ரயோகங்களும் உள. நைஷதம் 5 வது ஸர்க்கம் 50 வது ச்லோகம் ‘ஸமூஹஜநாவலீ’ என்று காணப்படுகிறது. மல்லிநாதன் என்ற உரைசெய்தவரும் ‘ஸம’ தாதுவிற்குப் பரஸ்மைபதியுமுண்டென்று விஸ்தாரமாய் நிர்வாஹம் செய்திருக்கிறார். ஆகையால் இது கொஞ்சமேனும் பிழையல்ல. ‘ஸமேதி’ என்று தன் புத்தியால்பாடம் கல்பிக்கவேண்டியதில்லை. மேலும்,

‘வ்யாதிக்ஷய ஸம ஜீவித ஶரணம்
ஜந்ம ஸதா ஸ்ம்ருதி ஜாமரணம் |
பயத ஶ்ரீசரண ஸந்நிதிமேத்ய
யாதநாப்ராணம் தயே ஶரணாகதா: ||’

என்று நாகேசபட்டர் க்ரந்தத்தில் எழுதியிருப்பதைப் பார்க்கலாம். ஆக, ஸம தாதுவை அவர் ஸகர்மகமென்கிறார். தவிரவும் ‘ஸமஜிஷ’ என்று இரண்டாம் வேற்றுமை தானிருக்க வேண்டும். இங்கு ஏழாம் வேற்றுமை காணப்படுகிறது.

ஆகையால் இங்கு வலதி என்பது வல தாதுவில்லை. வல ஐல ஸ்வாதி, என்றவர்த்தத்தில் 'ஸூவாஸிவ' 'அதன் பேரில்' கதஸ்ஸிவ. கூழில்விழுந்த ஈ போல் சுழன்று கொண்டிருக்கிறது என்று தான் அர்த்தம், என்பதாக, அடியேனுடைய திருத்தகப்பனார் ஸாஹித்யாலங்கார, வ்யாகரண பாரீண சக்ரவர்த்தி, கோபாலாசாரியார் ஸ்வாமி நிர்வாஹம் செய்து ஸ்தோத்திரத்திற்கு வ்யாக்யானம் செய்தருளியிருக்கிறார்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:.

புயலும் பொறுமையும்

[கல்யாணபுரம் ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசாரியர் M. A.
வித்வான் L. T. திருவையாறு]

* வெள்ளேரி மாதவாச்சார்யர் என்னும் ஸ்வாமி நடாதூர் நாராயணாசார்யர் என்ற ப்ரஸித்த வித்வானுடைய திருக்குமாரர். பிதாவினுடைய விலக்ஷணமான பாண்டித்யம் இம்மஹானுக்கு இல்லாவிட்டாலும் பரம்பரையாக வந்து சேர்ந்த சிஷ்யவர்க்கமானது ஏராளமாயிருந்தது. நாராயணாசார்யர் பரமபதத்திற்கு எழுந்தருளியபொழுது இந்த லீலா விபூதியில் ஏழு காணி பூமியையும் 32 பிராயமுள்ள நம் மாதவாசார்யரையும், விட்டுவிட்டுச் சென்றார். நம் மாதவாசார்யருக்கு ஆறு குழந்தைகள். தொண்டை மண்டலத்தில் பத்துப்பதினைந்து ஸ்ரீ கிராமங்களில் சிஷ்யர்கள். ஸாமாந்யமான காவ்ய நாடக ஜ்ஞாநமும் நம் ஸ்வாமிக்கு ஏற்பட்டது என்றால் அது ஏதோ ஆச்சர்யமென்றே சொல்லலாம். தந்தையாருடைய காலக்ஷேபகோஷ்டிகளில் வீற்றிருக்க இவருக்குப் பொழுதே வாய்த்ததில்லை. ஆகவே ச்ரவண முறையாகக் கூட ஸம்ப்ரதாய க்ரந்தங்களை இவர் அநுபவித்ததில்லை. ஒன்றிரண்டு ஸமயங்களில் வீற்றிருந்தாலும் க்ரந்தங்களின் கடினமான பொருள், நடை, லக்ஷ்யம், இவற்றினால் தன் மனத்தை ஆயாஸப்படுத்திக்கொள்ளவும் மாட்டார் ஆயினும் தந்தையார் காலத்திலேயே 'சின்னஸ்வாமி'யாக ஸகல மரியாதைகளையும் பெற்ற இவர் பிறகு "ஸ்வாமி" யாகவே பதம் பெற்றார்

---

* இக்கதையில் வரும் பெயர்கள் எல்லாம் கற்பனையே யொழிய வாழ்க்கையில் யாரையும் குறிப்பனவல்ல.

சாஸ்திரஜ்ஞாநம் இல்லாவிட்டால் என்ன? உலக அறிவு மிகவும் நிறைந்த . தமது சிஷ்யர்கள் க்ரமேண வெளியில் ஆசார்யவரணம் செய்வதைக் கண்ணுற் ர். தம் பதவியைப் புத்திநுட்பத்தால் ஸ்தாபித்துக்கொள்ளத் தீர்மானித்தார். ஏழுவர்ஷகாலம் சஞ்சலமான பொழுது கழித்தார். நாற்பது வயதாயிற்று. வெள் ளேரியில் தாரித்ரியத்தால் துன்பமடைந்த தாமோதரன் என்னும் ஒரு சிறந்த பண்டிதர் இருந்தார். நல்ல ஜ்ஞாநம். ஆனால் பாக்யமில்லை. தினசரி 'பசவதாராத நமே' [வபி றுவார்ப்பதே] ப்ரம்ஹ ப்ரயத்நமாயிற்று. ஒருநாள் காலையில் வெள்ளேரி கிராமமே வியக்கத்தக்க அதிசய ஸம்பவம் நிகழ்ந்தது. ஸூர்யன்போல் சுடர் வி ளங்க, த்வாதச ஊர்த்வ புண்டரம் ஜ்வலிக்க, மாதவாசார்யர் வீற்றிருக்க, அவர் எதி ரில் தாமோதராசார்யர் 'காலக்ஷேபம்' செய்து கொண்டிருந்தார். ஜனங்கள் ஆச்சர் யப்பட்டனர். "மாதவரின் சிறந்த அறிவு ஜ்வலிக்காமலல்லவோ இருந்தது" என் றார் சிலர். 'ஆஸாமி உள்ளே இருக்கிறாரய்யா!' என்றார்சிலர். "புலிக்குப்பிறந்தது பூனையாகுமா?" என்றார்சிலர். "தாமுவுக்கே பாடம் சொல்வதென்றால் இவர் சலா நிதியாகத்தான் இருக்கவேண்டும்" என்றார் பிறர். "கொல்லைப் பச்சிலைக்கு வீர்யமி ல்லை, என்ற வசநம் உண்மையாயிருக்கிறதே" என்று ஆச்சர்யப்பட்டான் வாயா டி. வாஸுதேவன். க்ரமேண வாஸுதேவனும் அவனுடைய ஸகாக்களுங்கூட கால க்ஷேப கோஷ்டியைஅலங்கரித்தனர். கிராமத்தில் பத்துப்பதினைந்து பெயர்கள் ஆய்விட்டது தினசரி கோஷ்டியில்!.

நம் ஸ்வாமியின் வாழ்க்கைநிலை மாறிற்று. அயலூரிலிருந்து சிஷ்யர்கள் வர ஆரம்பித்தனர். வைதிகமான கார்யகலாபங்கள் சிஷ்யர்களுக்காக அதிகமாயின. பஞ்சஸம்ஸ்காரம் ப்ரபத்தி அனுஷ்டானம் இவை முறையாக நம் ஸ்வாமியின் கர்த்தவ்யகோடியில் விளங்கின. கிராமத்தில் கோடியிலுள்ள ஏரிக்கு ஸ்வாமி பாதுகைகள் சப்திக்கப் பஞ்ச பஞ்ச உஷக்காலத்தில் எழுந்தருளுவார். வாயாடி வாஸுதேவன் கதிரொளிதீபம் கலசமுடனேந்திச் செல்வான். தாமோதரர் கைக ட்டி வாய்புதைத்துப் பின்னே வருவார். நுட்பமான ஐயப்பாடுகளை ஆசார்யனி டம் கேட்டுத்தெளிந்த பொலிவு முகத்தில் கூத்தாடும். இந்த இரு சிஷ்யர்களுட னும் சில ஸமயம் திக்விஜயம் செய்வார். சிஷ்ய ஸமூஹம் பெருகலாயிற்று. தந்தையா ரைக்காட்டிலும் அதிகமான ஸம்ருத்தி இவருக்கு உண்டாய்விட்டது. மாதவா சார்யர் ஸாதிப்பார், 'எல்லாம் அன்று அடியேனிடம் வைத்த க்ருபாலேசமே' என்று வாஸுதேவனும் கண்ணீர் வடித்து, ஆஹா! நிகமாந்த மஹா தேசிகன் என் கிறார்களே! அவரைக் கண்ணால் கண்டது யார்? இவரே நம் கண் படைத்த பயன்! என்ன அறிவு! என்ன ஆசார்யபக்தி! ஒரு பெருமையும் தன்னுடையதல்ல என்கிறாரே! என்ன தாழ்வு! என்ன வைராக்யம்! பணம் என்றால் த்ருணமாக மதிக்கிறாரே!' என்றான். தாமோதரனும், 'அப்பா! இவர் அவதார புருஷனே; அதில் என்ன ஆச்சர்யம்? இவர் 'வாஸுதேவ: ஸர்வமிதி ஸமஹாத்மா ஸுதுர்லப:' என்னத்தக்கவரே!' என்றார்.

மாதவாசார்யர் தம் தந்தையாரின் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தைக் கொண்டா டினர். சிஷ்யர்கள்வந்து குழுமினர். செலவுபோக ஸ்வாமிக்கு ஆயிரத்தைந்நூறு

ரூபாய் கிடைத்தது. நம்ஸ்வாமி கைகுவித்து 'பித்ரே ப்ரஹ்மோபதேஷ்ட்ரே' என்கிற ச்லோகம் எனக்கே பொருந்தும் என்றார்.

சென்னையில் வெகுநாள் லௌகிக உத்யோகத்தில் இருந்து ரிடையராகி வெள்ளேரிக்கு வந்து சேர்ந்தார் ஸ்ரீதரன் என்பவர். மாதம் ஐந்நூறு ரூபாய் பென்ஷன். பரம ஆஸ்திகர்; ஸாத்விகர். இவரைப்பார்த்தவுடன் நம் ஸ்வாமிக்கு ஆவல் ததும்பியது. 'இவர் மாத்திரம் நம் சிஷ்யராகிவிட்டால்!' என்று மனோரதிக்கத் தொடங்கினார். இரவுபகலாகத் தெய்வத்தை வேண்டினார். ஸ்ரீதரனை அடிக்கடி விசாரிப்பார். வாஸுதேவன் இவரது பெருமையாகிய வெள்ளத்தை ஸ்ரீதரன் காதில் பாய்ச்சினான். ஸ்ரீதரன் சிறந்த பக்திமான். தாமோதரனும் வாஸுதேவனும் மாறிமாறிச் செய்த முயற்சியின் பயனை என்னவென்று சொல்வது? ஸ்ரீதராசார்யரே! ஒன்றுகேளும் ஆசார்யனில்லையென்றால் ஆத்மநாசமே!

'ஆசார்யாதிஹ தேவதாம் ஸமதிகாம் அந்யாம் ந மந்யாமஹே' என்று சொல்லுகிறார்கள்.

"பாபிஷ்ட: க்ஷத்ரபந்துஶ்ச புண்டரீகஶ்ச புண்யக்ருத் ।
ஆசார்யவத்தயா முக்தௌ தஸ்மாத் ஆசார்யவாந் பவேத் ॥"

என்று ஸச்சாஸ்திரங்கள் கதறுகின்றன. ஆசாரியனில்லாமலிருப்பவன் பதியற்ற பெண்மணி போன்றவன். அவனை ஸ்ரிய:பதி கண்ணெடுத்தும் பாரான் என்றார் தாமோதரன்.

நெருப்புத் துண்டமய்யா நம் ஸ்வாமி! காம க்ரோதங்களை இவரைப் போல் ஜயித்து நிஸ்ப்ருஹராக இருப்பவர் இந்த உலகில் யார்? என்றான் வாயாடி. ஸ்ரீதரனும் கீதாபாஷ்ய கோஷ்டியில் அந்வயித்தார். ஸ்வாமி ஸித்தார்த்தரானார்! ஸ்ரீதரனுக்கு ஸம்ஸ்க்ருத பாஷையில் பரிசயம் கிடையாது.

மாதவாசாரியர்—ஸ்ரீதராசார்யரே! தத்வம் மனத்தில் படிவது ஸம்ஸ்க்ருத அறிவினலா? அல்லது ஆசார்யர்கள் கருணையாலா? சொல்கிறவர்கள் ச்ரத்தையுடனும் கருணையுடனும் சொன்னால் புரியாதது ஒன்றும் இல்லை. நீர் மிகவும் பாக்யசாலி, ஸுக்ருதி, என்றார். சில நாட்களில் ஸ்ரீதரனது 'ஆத்மரக்ஷாபரத்தை'யும் தாமே ஏற்றுக் கொண்டார். அதாவது:—ஸ்ரீதரனுக்குச் சரணாகதி என்னும் காரியத்தையும் செய்து வைத்தார். ஸ்வாமியின் செல்வம் பெருகிற்று. 'எல்லாம் நாராயணாசாரியன் க்ருபை' என்றார் தாமோதரன். 'என்ன ஸ்வாமி! பரமாசாரியனின் பெயரைச் சொல்கிறீர்களே கூச்சம் வேண்டாமா?' என்றான் வாயாடி. தாமோதரன் புன்னகையுடன் தலைவணங்கினார். மாதவாசார்யனின் மஹோன்னத பதவிதான் என்னே! அவரை அடைந்த தாமோதரனுக்கும் தேஹயாத்திரை ச்ரமமற்றதாயிற்று.

ஏரிக்கரையில் பெண்டிகள் இதைப்பற்றிப் பேச ஆரம்பித்தனர். 'ஏண்டி பெருந்தேவி!, வித்வான்ஸ்வாமி ஆமண்டையா இப்போ உப்பூன்னும் புளீன்னும் எரவல் வாங்க வரதில்லையே! பாத்தயாடீ. என்றாள் ஒருத்தி. மற்றொருத்தி

தன்னாடீ ஆச்சரியமாயிருக்குதுடீ! வாங்கின பண்டங்களைத் திருப்பவும் கொ
துட்டாடீ! மாதவாச்சாரிக்கு ஏராளப்பணம் குமியரதாம். சிஷ்யாளுக்கு என்
னடீ கொறச்சல், என்றாள் மற்றொருத்தி!. அதென்னாவோ அம்மா! வாஸுதே
வன் இவரைப்பத்தி கோண நோணன்னு புகார் பண்ணித்து. சிலசமயம் கூச்
சல் போட்டுது. இப்போவானா சம்முனு இருக்கு. அதின்னா ரஹஸ்யமோ! என்றாள்.
பக்கத்தில் நின்று கொண்டிருந்த இன்னொருத்தி சிரித்துக்கொண்டு 'வித்வானை
யும் வாயாடியையும் வெல்றது எது? துட்டுதான்' என்றாள். பெண்கள்சிறந்த
இயற்கை யறிவுடையவர்கள். அவர்களுடைய நுண்ணிய புத்தி பலம் யாரிடமும்
இல்லை ஆனால் மனத்தில் எந்தச் செய்தியையும் அடக்கிவைக்கத் திறமற்றவர்.

சிறந்த அறிவும் ப்ரவசனஸாமர்த்தியமும் உள்ளவர்க்குத்தான் மோக்ஷ
மென்பதில்லை. அறிவும் ஆற்றலும் ஸ்ரீமந்நாராயணனது க்ருபாபலத்தால் ஜன்ம
காலத்திலேயே இருக்கவேண்டியது. ஆயினும் வாழ்வில் வைஷ்ணவனுக்கு ஸ்வரூபஜ்ஞா
னம் வேண்டும். அது ஒன்று இருந்துவிட்டால் மற்ற அறிவு வேண்டாம். பணம்
வேண்டாம், மற்றொன்றும் வேண்டாம், ஈச்வரன் இரங்குவான். அஹங்காரம் கொ
டிய பாவம். ஸ்ரீவைஷ்ணவன் கண்டு பயப்படவேண்டிய பாதகம்.

நம்மைப் படைத்த ஸர்வரக்ஷகனான ஸ்ரிய:பதியின் ஸ்வாமித்வத்தையும் நம்
ஜன்ம ஸித்தமான சேஷத்வத்தையும், அவனது எல்லையற்ற தயையின் உண்மையை
யும், ரக்ஷிக்கும் தன்மையையும், கலங்காப் பெருநகரில் கலப்பற்ற ஆனந்த கைங்கர்
யத்தை அடையும் இன்பத்தையும் காமக்ரோதாதிகளின் ஹேயதையையும் உணர்
வதே ஸ்ரீவைஷ்ணவ ஸ்வரூபமாகும்.

நம் மாதவாசார்யர் சிறந்த சாஸ்திர அறிவில்லாதபோதும் சிறந்த ஆசார்யகு
சலாம். எப்பொழுது? அடிப்படையான அன்பும், அருளும், விரதமும், ஸ்நே
ஹமும், தாக்ஷிண்யமும், பண்பும் இருந்தால்! எல்லையற்ற சர்வமும் பண ஆசை
யும் பூஜிக்கப்படும் பித்தும் அவரை வாட்டியது. இயற்கையிலேயே க்ரூரமான
அவரது ஹ்ருதயத்தை அவரது ஸம்ப்ரதாய வாழ்க்கை சிறிதும் மாற்ற வில்லை.
இவருடைய ஆசார்ய 'தர்பார்' இப்படி நடக்க வெள்ளேரிக்கு வட இந்தியாவில்
டில்லியிருந்து உத்யோக விடுதலை பெற்று ஒரு மஹான் வந்து சேர்ந்தார்.

இவர் மாதவாசாரியருக்குப் பால்யஸ்நேஹம் உடன்படித்தவர். இங்கி
லீஷ் படிப்பின் பயனால் வாழ்வில் வேறு துறையில் அமர்ந்து வெளியூர் சென்
றார். அவரது ஊர் வெள்ளேரி தான். சிறந்த ஸம்ப்ரதாய அறிவு. ஸம்ஸ்க்ருதம்,
இங்கிலீஷ், தமிழ், ஹிந்தி, பாரஸீகம், ப்ரஞ்சு முதலிய ஆறு மொழிகளில் வல்லவர்.
உலக மதங்களை ஆராய்ந்து, ஸ்ரீவைஷ்ணவ தத்வத்தில் எல்லையற்ற அன்பு கொண்டு
பொருந்தியவர். உபநிஷத்துக்களையும் ஆழ்வார்ஸூக்திகளையும் மனப்பாடமாகச்
சொல்லுவார். அர்ச்சாவதாரத்தில் ஆழ்ந்த பித்துக் கொண்டவர். ஆழ்வார்க
ளிடத்தில்- விசேஷித்துத் திருமங்கை யாழ்வாரிடம்- கடலன்ன அன்பு கொண்டவர்
பாலன்ன திருமேனி; கம்பீரமான ஆக்ருதி; உடல் வலிமையினும் மனப்பொறுமை

184275

யாரும் பக்கலை வசீகரிக்கத்தக்க தோற்றம். எப்பொழுதும் புன்சிரிப்புக் கொண்ட வதனம். அழகிய ஊர்த்வபுண்ட்ரக்கோலம். மெல்லிய பனி போன்ற வெள்ளைப் பட்டுக் கரை வேஷ்டி. யாரிடமும் அன்பார்ந்தசொல். ஏழைகளிடம் எல்லையற்ற இரக்கம். ஏழைகளின் சொல்லைக் கேட்டு இவர் கரைந்து அளிக்கும் உபகாரங்களைக் கண்டு இவரைப் பைத்தியமென்றும் கியாதியில் ஆசை உடையவரென்றும் உலக அறிவு இல்லாவதரென்றும் நினைத்தவர் பலர். இவரைப் பலர் ஏமாற்றிப் பணம் பறித்ததைக் கண்டே ஜனங்கள் அப்படி நினைத்தனர். இவர் மனத்தில் மாத்திரம் ஏதோ உறுதி இருந்தது. வாரிவாரிக் கொடுப்பார். வந்தவரைக் கேள்வி கேட்கமாட்டார். இரவுபகலாக யார்வந்தாலும் அன்னமளிப்பார். முகமலர்ச்சியுடன் போகச்சொல்லுவார். ‘நாலு பேர்புகழ வேண்டுமென்று இப்படிச் செய்கிறார்’ என்றார் ஒருவர். நல்லமனமுடைய இன்னொருவர் ‘டேய்! இதென்ன முட்டாள் தனம்? ஏரிக்கரையில் வில்லி ஒருவன் பெருத்த சுமையை வைத்துக்கொண்டு சற்று இளைப்பாறுவதற்காக் நாற்புறமும் பார்த்தான். சுமையை இறக்குபவர் இல்லை. நம் யதுநாதன் ஓடிப்போய் சுமையை இறக்கிவிட்டு அவனை அன்புடன் ஏதோ கேட்டார். அவனுக்குத் தன் இடுப்பிலுள்ள கொஞ்சம் சில்லரையைக் கொடுத்து விறகுகட்டைத் தன்வீட்டில் போடச்சொன்னார். விலை மூன்றுமடங்கு கொடுத்திருக்கிறார். ‘உமக்கு ஏன்விறகு வீட்டில்ஏராளமாய் இருக்கிறதே’ என்றேன். ‘டவுனுக்கு ஐந்துமைல் நடந்து விற்றுப் பிறகு, அரிசி வாங்கிச் சாப்பிடவேணுமென்றான். அதனால் நானே வாங்கிக்கொண்டேன்’ என்றார். ‘பத்தணா பெறாத சட்டிற்கு இரண்டுரூபாய் சொச்சம் கொடுத்து விட்டீரே’ என்றேன். ‘இல்லை இல்லை. இன்னொருநாள் கொஞ்சம்கொண்டுவருவதாகச் சொன்னான். நான் சும்மா கொடுத்து விடுவேனோ?’ என்றார். பாருங்கள் இவ்வளவு கனிவுள்ளவரை அசடென்றும் உலக அநுபவமில்லாதவரென்றும், உலகம் நினைக்கிறது’ என்றார். இந்த யதுநாதன் வெள்ளேரியில் குடி ஏறினார். அந்தஊர் வேணுகோபாலனது ஆலயத்தில் கைங்கர்யங்கள் செய்வார். தீர்த்தம்கொணர்வார், திருவிளக்கேற்றுவார், ராமாயணத்தை இனிய குரலுடன் ஓதுவார், மாலை தொடுப்பார். மகிழ்ந்து சாற்றுவார் இளங் குழந்தைகளிடம் எல்லையற்ற அன்புகொண்டவர். இம் மஹானுடைய வரவினால் நம் கதையின் அமைப்பே மாற ஆரம்பிக்கிறது.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஏஜென்ஸி நிபந்தனைகள்

ஒரு தடவையில் 10 பிரதிகளுக்குக் குறையாமல் எடுத்துக்கொள்பவர்களுக்கு 100-க்கு 20 வீதம் கமிஷன் கொடுக்கப்படும். ஏஜெண்ட்டுகள் காபி 1-க்கு 4 அணா வீதம் டிபாஸிட் கட்டவேண்டும். புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பதற்கும் கமிஷன் கொடுக்கப்படும். மற்ற விவரங்களுக்கு நேரில் ஆபீஸுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்திர மஹோத்ஸவம்.

ஸ்ரீரங்கம்.

நாளது விக்ருதி வருஷ புரட்டாசி மீ 23உ (9-10-1950) இவ்வூர் ஸ்ரீ அஹோபிலமடத்தில் வழக்கம் போல் ஷை திருநக்ஷத்ர மஹோத்ஸவம் ஆரம்பிக்கப்பட்டு ஏழு நாள் உத்ஸவம் நடந்து இனிது முடிவு பெற்றது. ஏழு தினங்களிலும் வேத பாராயணமும் திவ்ய ப்ரபந்தாநுஸந்தானமும் விமரிசையாக நடைபெற்றன. சாற்றுமுறை தினத்தன்று மடத்திற்குள்ளேயே புறப்பாடு முதலிய விசேஷோத்ஸவங்கள் நடைபெற்றன. ஸ்ரீரங்கவாஸிகளான அநேக ஆஸ்திக லௌகிக பிரமுகர்களும் வைதிகர்களும் உத்ஸவத்தில் அந்வயித்து க்ருதார்த்தர்களானார்கள். அன்று ஸாயங்காலம் 4 மணி முதல் 6 மணி வரையில் ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வான் தேசிகதர்சந விஜயத்வஜர் புத்தங்கோட்டகம் ஸ்ரீ.உ.வே. ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமியால் ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய மஹிமையைப் பற்றி ஓர் சிறந்த உபந்யாஸம் செய்யப்பட்டது. யாவரும் கேட்டு இன்புற்றனர்.

பி.எஸ்.ஸ்ரீநிவாஸய்யங்கார். ஏஜண்டு.

* * * * * * * * *

கல்கத்தா.

ஸ்ரீ பங்கிகமாந்த மஹாதேசிகனுக்குப் பிறகு நம் ஸித்தாந்த ப்ரவசனத்திற்கென்று அவதரித்து, ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனிடம் ப்ரேஷ மந்த்ரோபதேசம் பெற்று, துரீயாச்ரமத்தை ஸ்வீகரித்து, ஒரு திவ்யாஸ்தான பரம்பரையை லோகோஜ்ஜீவநார்த்தமாக ஏற்படுத்தி ஸம்ப்ரதாயத்தைத் தழைத்தோங்கும்படி செய்வித்த நம் ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனது திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தை ஸ்ரீஸந்நிதி சிஷ்யர்களும் மற்றுமுள்ள பக்தர்களும் கல்கத்தாவில் சருக்கை ஸ்ரீ.எஸ்.நரஸிம்ஹ அய்யங்கார்ஸ்வாமியின் திருமாளிகையில் ஒன்று கூடி சிரத்தையுடனும் பக்தியுடனும் கொண்டாடினர்.

வாங்கல். ந. நாராயண தாஸ:

* * * * * * * * *

ஸ்ரீ அஹோபில மடம் 41ம் பட்டம், ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹா தேசிகனின் 9வது திருவாராதன மஹோத்ஸவம்.

ஸ்ரீ அஹோபிலமடம். திருவள்ளூர்

இம்மஹோத்ஸவமானது விக்ருதி வருஷ ஐப்பசி மீ 25உ வேதப்ரபந்த ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தசதுஷ்டய இதிஹாஸ புராணாதிக்ரந்த பாராயணங்களுடன் உபக்ரமிக்கப்பட்டு ஐந்து தினம் விசேஷ ததீயாராதனத்துடன் நடந்து ஐப்பசி மீ 29உ (14.11.50) முடிவடைந்தது. வெளியூரிலிருந்தும் உள்ளூரிலிருந்தும் கைங்கர்யத்தில் அன்வயித்த ஸ்வாமிகளுக்கு வழக்கப்படி ஸம்பாவனை செய்யப்பட்டது.

ஸ்ரீகார்யம் அஹோபிலமடம் திருவள்ளூர்

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

விக்ருதி ஹு. மார்கழிமீ [1950 டிசம்பர்மீ 1951 ஜனவரி ம

[தக்ஷிணாயநம். ஹேமந்தருது. தநுர்மாஸம்]

16-12-50	1உ	சனிக்கிழமை	— தநுர்மாஸாராதநாரம்பம்
19-12-50	4உ	செவ்வாய்க்கிழமை	— ஏகாதசிதிதி
20-12-50	5உ	புதன்கிழமை	— ஸர்வசுக்ல த்வாதசிதிதி; ஸர்வ ஏகாதசி வ்ரதம்; ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி; இராப்பத்து-திருவத்யயநோத்ஸவாரம்பம்.
21-12-50	6உ	வியாழக்கிழமை	— த்வாதசிவ்ரதம்; த்ரயோதசி திதி
22-12-50	7உ	வெள்ளிக்கிழமை	— சதுர்த்தசி திதி
23-12-50	8உ	சனிக்கிழமை	— அதிதி
24-12-50	9உ	ஞாயிற்றுக்கிழமை	— பௌர்ணமி திதி
29-12-50	14உ	வெள்ளிக்கிழமை	— இராப்பத்து திருவத்யயநோத்ஸவ சாத்துமுறை
2-1-51	18உ	செவ்வாய்க்கிழமை	— சாப க்ருஷ்ண நவமி திதி
3-1-51	19உ	புதன்கிழமை	— சாப க்ருஷ்ண தசமி-ஏகாதசி திதி-த்வயம்
4-1-51	20உ	வியாழக்கிழமை	— த்வாதசி திதி; ஸர்வ ஏகாதசி வ்ரதம் ஸ்ரீ அஹோபிலமடம் 40-ம் பட்டம் ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் திருநக்ஷத்ரம்
5-1-51	21உ	வெள்ளிக்கிழமை	— ஸ்ரீ தொண்டரடிப் பொடியாழ்வார் திருநக்ஷத்ரம்
7-1-51	23உ	ஞாயிற்றுக்கிழமை	— ஸர்வ அமாவாஸ்யை
12-1-51	28உ	வெள்ளிக்கிழமை	— ஸ்ரீ அஹோபில மடம் 41-ம் பட்டம் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் திருநக்ஷத்ரம்
13-1-51	29உ	சனிக்கிழமை	— ஷஷ்டி திதி, போகிப் பண்டிகை
14-1-51	தைமீ 1உ	ஞாயிற்றுக்கிழமை	— மகர ரவி. 6-22. உத்தராயண புண்ய காலம். தநுர் மாஸாராதந பூர்த்தி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸம்பாதகரின் குறிப்புகள்

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகில ஶக்தி தர: ஸ்வதாம்நா |
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரண ஶ்ரவண த்வகாதீந்
ப்ராணாந் நமோ பகவதே புருஷாய துப்யம் ||

ஓர் நற்செய்தி

இம் மாதத்திலிருந்து ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா பத்ரிகையை வேறு அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட ஏற்பாடாகியிருக்கிறது. பல ப்ரகாரங்களாலும் நம் ஸித்தாந்த ப்ரசாரத்தையும் ஸம்ப்ரதாயாபிவ்ருத்தியையும் செய்ய வேண்டுமென்ற பரந்த நோக்கங்கொண்ட நம் ஸ்ரீ அழகிய சிங்கர் பல்லாயிரம் ரூபாய் செலவில், **'மாலோல முத்ராலயம்'** என்னும் முத்ராக்ஷர சாலையை (ப்ரஸ்ஸை) ஏற்படுத்தும்படி நியமித்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இம் முத்ராக்ஷர சாலை திருவள்ளூரில் ஸ்தாபிக்கப்படுகிறது. நம் ஸித்தாந்தத்திலும் ஸம்ப்ரதாயத்திலுமுள்ள அரிய பெரிய நூல்களையும், இதுவரையில் அச்சிடப் பெறாமலிருக்கும் பல பூர்வாசார்ய க்ரந்தங்களையும் நல்ல முறையில் அவசியத்திற்குத் தக்கபடி வ்யாக்யாநாதிகளுடன் அச்சிட்டு ப்ரசுரப்படுத்துவது இம் முத்ராக்ஷர சாலையின் முக்ய கார்யங்களில் ஒன்றாயிருக்கும். இப்படி ஸர்வலோக ஹிதைஷியான ஸ்ரீ அழகியசிங்கரின் அநுக்ரஹத்தால் தோன்றியிருக்கும் இம் முத்ராக்ஷர சாலை தினே தினே அபிவ்ருத்தியடைந்து அனைவரும் தத்வ ஹித புருஷார்த்தங்களை எளிதில் அறிந்து கொண்டு உஜ்ஜீவிப்பதற்குச் சிறந்த உதவி செய்து வருமாறு அருள் புரிய வேண்டுமென்று மாலோலனான ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனை ப்ரார்த்திக்கிறோம்.

புதிதாக அச்சகம் (பிரஸ்) ஏற்படுத்துவதற்கும் அதில் நம் ஸஞ்சிகையை அச்சிடுவதற்கும் சர்க்காரிடமிருந்து அநுமதி முதலியதைப் பெற வேண்டியதில் நேர்ந்த தவிர்க்க முடியாத சில காரணங்களால் தாமதமேற்பட்டபடியால், வழக்கப்படி ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவை சந்தாதாரர்களுக்கு அனுப்புவதில் கொஞ்சம் விளம்பமேற்பட்டு விட்டது. சந்தாதாரர்கள் க்ருபைசெய்து க்ஷமிக்கவேண்டுமென ப்ரார்த்திக்கிறோம். அடுத்தமாதம்முதல் ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா வழக்கம்போல் தவறாமல் வெளிவரும்.

* * *

இந்த ஸஞ்சிகையிலிருந்து ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவில் ஒரு தொடர் கதையை வெளியிட ஆரம்பித்திருக்கிறோம். அதைப்பற்றி நமது வாசக மஹாசயர்களிடையே பலவிதமான அபிப்ராயம் ஏற்படக் கூடுமாதலால் நம்முடைய

நோக்கத்தைத் தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகிறது. வேதோபப் மணங்களாயும், உத்தம புருஷ சரிதானு வர்ணநங்களாயும், தத்வ ஸாக்ஷாத்கார பெற்ற மஹர்ஷி ப்ரணீதங்களாயுமுள்ள ராமாயண பாரத பாகவதாதிகளைப் போல் படந ச்ரவணாதிகளாலும் புண்யத்தைத் தரக்கூடியது என்ற எண்ணத்துடன் இக் கதையை நாம் வெளியிடவில்லை. வாழ்க்கையில் ஸாதாரணமாக

தொடர்கதை

ஏற்படக் கூடிய ஸந்தர்ப்பங்களைக் கொண்டு மிக்க கல்பனா சக்தி வாய்ந்தவர்களால் நன்கு சிந்தித்து எழுதப்பட்ட சிறு கதைகள் மூலம் நமது வேதங்களிலும் உபநிஷத்துக்களிலும் இதிஹாஸ புராணங்களிலும், ஆழ்வார் ஆசார்யர் ஸ்ரீஸூக்திகளிலும் அவர்களின் அநுஷ்டானங்களிலும் பொதிந்திருக்கும் சிறந்தசில உண்மைகளையும் ஆத்ம குணங்களின் மேன்மையையும் ஒழுக்கத்தின் சிறப்பையும் எல்லோரும் நன்கு உணரும்படி செய்ய முடியுமென்பது நமது கருத்து. அவைகளை விளக்கி இதம்பரமாக ஒரு வ்யாஸமாக எழுதினால் பருக்கு அதைப் படிப்பதில் சிரத்தையிருக்காது; கதை ரூபமாயிருந்தால் யாவருக்கும் படிப்பதில் ஊக்கமேற்படக்கூடும். இந்த எண்ணத்துடன் தான் புயலும் பொறுமையும்' என்ற தொடர்கதையை வெளியிட ஆரம்பித்திருக்கிறோம். இதில் நம்முடைய நோக்கம் எவ்வளவு தூரம் வெற்றி பெறுமென்று பிறகுதான் தெரியும். ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியாவின் அபிவிருத்தியில் உள்ளன்பு பூண்ட நமது வாசக மஹாசயர்கள் இதைப்பற்றித் தமக்குத் தோன்று அபிப்பிராயத்தை நமக்குத் தெரிவித்து உதவி புரிவார்களென்று எதிர் பார்க்கிறோம்.